DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**Crl.M.P. No. 105/2026**

**in**

**CC. 72/2020**

**Examination of petitioner/ Complainant** Dt. 10.03.2026

| | |
|---|---|
| Name | கரிகாற்சோழன் (Inspector of Police) |
| Father's Name | ரத்தினம் |
| Village | பாலையூர் |
| Taluk | குத்தாலம் |
| Age | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.03.2026

நான் தற்போது பாலையூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவேன். இவ்வழக்கின் எதிரி மேகலா தொடர்ந்து தலைமறைவாக இருந்து வருகிறார். அதன் காரணமாக எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை இதுநாள் வரை நிறைவேற்றப்படாமல் நீண்ட நாட்களாக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. எதிரியை கொடுக்கப்பட்ட முகவரியில் சென்று பார்த்தும், அக்கம்பக்கத்தில் விசாரணை செய்தும் எதிரி தொடர்ந்து தலைமறைவாக இருந்து வருவதால் அவரை தேடி கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே எதிரி மேகலாவை பிரகடனபடுத்தப்பட்ட குற்றவாளியாக அறிவிப்பதற்காக BNSS பிரிவு 84-ன் கீழ் மனுதாக்கல் செய்துள்ளேன். அந்த மனுவில் கண்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். மனு பிரமாண பத்திரிக்கை நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரியை பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக நீதிமன்றம் அறிவிக்கும்பட்சத்தில் அது தொடர்பாக அறிவிப்பு மற்றும் செய்திதாள் விளம்பரம் செய்திட நான் தயாராக உள்ளேன்.

10/3/26